
ராணி
காமிக்ஸ்
இரத்த வெறி
ரூ. 2

ராணி காமிக்ஸ்–205
(மாதம் இருமுறை இதழ்)
KK
ஜனவரி 1–15
1993

இரத்த வெறி

வந்துவிட்டோம், பியர்சன்! இன்னும் கொஞ்ச தூரந்தான்!!

மில்டன்! நீ சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதா?
நன்றாக நினைவிருக்கிறது பியர்சன்!
எப்பொழுதோ நடந்தது. ஆனால், இப்பொழுதும் பசுமையாக இருக்கிறது!
எல்லாரும் வேகமாக வாருங்கள்!
புயல் வேகத்தில் வருகிறோம்!

வில்லில் இருந்து விடுபட்ட அம்பு போல பியர்சன் பாய்ந்து போனார்! ஆனால், அவர் தேடிப்போகிற ஆள் எங்கேயும் போய்விடப் போவது இல்லை!

அந்த ஆள் எங்கேயும் போக மாட்டார். இங்கேயேதான் இருப்பார்!
வந்துவிட்டோம், பியர்சன் அந்த இடம் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது!
இந்த இடந்தான்!

நிச்சயமாக இந்த இடந்தானா
ஆமாம், பியர்சன். இதே இடந்தான். நீங்கள் இங்கே வந்தது இல்லை அல்லவா?
என் கண்ணால் பார்த்தால்தான் நம்புவேன்!
அய்யோ... என்ன கொடூரம்!!
அது எப்படி நடந்தது?
பன்னிரண்டு ஆண்டு ஆகிவிட்டது... ஆனாலும், நேற்று நடந்தது போலிருக்கிறது!

நாங்கள் பயணிகளுடன் பெடாடிக்கு வந்துகொண்டிருந்தோம்.
அபாச்சி மலைப் பகுதியைத் தாண்டிக்கொண்டிருந்தோம்.

அது நீண்ட பாதை. எங்கள் வண்டிகளில் பத்து நாளாகப் பயணம் செய்துகொண்டிருந்தோம். யாரும் எதிர்ப்படவில்லை
இன்னும் மூன்று நாள் பயணததில் நாம் பெடாடியில் இருப்போம்!
அபாச்சிகளின் கண்ணில் படாமல் இருந்தார். மில்டன்!

அபாச்சிகள் இப்பொழுது அடங்கிவிட்டார்கள். தங்களைத் தாக்காத யாரையும் அவர்கள் தாக்குவது இல்லை.
அவர்கள் வெள்ளையருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை முறியடிக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.
"அப்பொழுது நான் அபாச்சிகளைத் தவறாகத்தான் புரிந்துகொண்டுவிட்டேன்"

அதேநேரம் அபாச்சிகளின் முகாமில்–
வெள்ளை நாய்கள் ஒப்பந்தத்தை மீறிவிட்டார்கள்! நம் எல்லைக்குள் வந்துவிட்டார்கள்!
அவர்களை சும்மா விடக்கூடாது! தொலைத்துவிட வேண்டும்!
உம்! புறப் படுங்கள்!!
“அதிகாலையில் அவர்கள் படை திரண்டு வந்தார்கள்”


"நாங்கள் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்"

"இரண்டே நாளில் பெடாடிக்குப் போய்விடு வோம்"
"இந்த மலைப் பாதை மிகவும் அழகாக இருக்கிறது. இங்கேயே தங்கி விடலாம்"
"அப்படி நடக்கும் என்று நாங்கள் நினைக்கவே இல்லை!"
உம்! விரைந்து வாருங்கள்!!
அபாச்சிகள் சூறாவளி போல வந்தார்கள்!

தாக்குங்கள்! கொல்லுங்கள்! ஒருவன்கூட உயிர் பிழைக்கக்கூடாது!
"எதிர்பாராத தாக்குதல்! நாங்கள் அதிர்ந்து போனோம்
"அபாச்சிகள்! ஆவேசத்துடன் வருகிறார்கள்!"
"ஓடிப் போங்கள்! உயிர் பிழைக்க வேறு வழியில்லை"
"அபாச்சிகள் எங்களை விரட்டி வந்தார்கள்"

"நாங்கள் உயிருக்குப் பயந்து ஓடினோம்"
"ஓடிவாங்க! வேகமா... இன்னும் வேகமா...
"அபாச்சிகள் மின்னல் வேகத்தில் அம்பு தொடுத்தார்கள்"

முதல் அம்பு ஒரு உயிரைக் குடித்தது!

அந்தக் கொடுமையை என் கண்ணால் பார்த்தேன். அதைச் சொல்ல வார்த்தைகள் இல்லை.
எனக்குப புரிகிறது!
“எங்களை தற்காத்துக்கொள்ள எவ்வளவோ முயற்சித்தோம்
ஓடிப் பயன இல்லை! எதிர்த்துத், தாக்குங்கள்”
“எதிர் தாக்குதல் அதிகப் பயன் தரவில்லை”
அவர்கள் புயல்! நாம் சிறு துரும்பு

"அப்பாச்சிகள் மூர்க்கத்தனமாகத் தாக்கினார்கள்"

"எல்லாம் அழிந்தன. நானும் கார்டனும் பதுங்கிக் கொண்டோம். அபாச்சிகள் போனபின்பும் கூட வெளியில் வரப் பயந்தோம்"
யாருமே பிழைக்கவில்லை
அவர்களின் உயிரைத்தான் காக்க முடிய வில்லை. உடலையாவது புதைப்போம்"
இந்தக் கல்லறைகளில் ஒன்றில்தான் உங்கள் மகன் உறங்கிக் கொண்டிருக்கிறான், பியர்சன்.
பாவம், அவன் ஐந்து வயது சிறுவன்! அநியாயமாகக் கொன்று விட்டார்கள்.
உங்களிடம் சேர்க்கத்தான் பாட்டி வீட்டிலிருந்து அவனை அழைத்து வந்துகொண்டிருந்தோம்.

பியர்சனின் ஒரே மகன் ஜேம்ஸ். 5 வயதுச் சிறுவன். பாட்டி வீட்டில் வளர்ந்துகொண்டிருந்தான். தந்தையிடத்துக்கு வந்துகொண் டிருந்தபொழுது அவனது வாழ்க்கை பரிதாபமாக முடிந்தது.
அவன் உயிர் பிழைத்திருப்பான் என்ற நம்பிக்கையில் 12 ஆண்டு காலமாக அவனைத் தேடி அலைந்துகொண்டிருந்தேன் இப்பொழுதுதான் நடந்தது தெரிகிறது.
என் ஒரே வாரிசை இழந்துவிட்டேனே!
எல்லாம் விதிப்படிதான் நடக்கும்!
விதியை மதியால் வெல்ல முடியும்!
நீங்கள் பாதுகாப்பாக என்னிடம் கொண்டுவந்து சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையில்தானே உங்களுடன் அனுப்பினார்கள்?

நீங்களோ அவனைப் பாதுகாக்கத் தவறிவிட்டீர்கள். அதுமட்டுமா? எனக்குப் பயந்து எங்கோ தலை மறைவாக ஓடி விட்டீர்கள்.
நான் மகளைத் தேடி அலைந்தேன். 12 ஆண்டுக்குப் பிறகு, உன்னைத்தான் கண்டு பிடிக்க முடிந்தது!
நடந்தது நடந்துவிட்டது. அமைதி பெறுங்கள், பியர்சன்!
இல்லை! பழிக்குப்பழி! இரத்தத்துக்கு இரத்தம்!!

அவரிடம் நான் உண்மையைச் சொல்லி யிருக்கக் கூடாதே!

மகளை இழந்த துயரம் அவரை ஆவேசம் அடையச் செய்துவிட்டது. நாளை அமைதி பெறக்கூடும்!
ஆனால், அடுத்த நாளே அவர் பழிவாங்கும் திட்டத்தைத் தொடங்கிவிட்டார்!

சின்னஞ்சிறு மொட்டு கருகிவிட்டது! இல்லை, உதிர்த்துவிட்டார்கள்! அதற்குக் காரண மானவர்களை நான் பழிதீர்க்காமல் விடமாட்டேன்!
அவரிடம் ஆவேசம் மட்டும் அல்ல; பணமும் ஏராளமாக இருந்தது! ஒரு மதுக்கடைக்குப் போனார்.
"எனக்கு ஒரு முரடன் வேண்டும்"
"கொலைகாரன்கூட இங்கே கிடைப்பான்"
பியர்சன் சரியான ஆட்களைத் தேடினார்!

உங்களுக்கு ஒரு வேலை இருக்கிறது
எங்கள் உல்லாசத்தைக் கெடுக்காமல் போங்கள்
வேலையை முடித்தால், உங்களுக்கு பத்தாயிரம் பவுன் தருகிறேன்
பத்தாயிரம் பவுன்!
“உட்காருங்கள்”
என்னோடு வாருங்கள்.
பியர்சனின் பின்னே அவர்கள் நடந்தார்கள்!

அவர்கள் வெளியே வந்தபொழுது இன்னொருவன் ஆர்ப்பாட்டமாக உள்ளே வந்தான்!
ஒரு பாட்டில் விஸ்கி! உடனே கொண்டுவா!
ஒரு மேசையில் அமர்ந்தான்.
இதை எடுத்துக் கொள்ளட்டுமா?
எடுத்துக் குடித்தான்.

விஸ்கியா, இது! சே! வெறும் தண்ணீர் போலிருக்கிறது!!
அதுக்கு என்னை ஏன் அடிக்கிறாய்?
நீதானே கொடுத்தாய்!
ஏய்! உனக்கு என்ன பைத்தியமா?
எனக்கா!


ஆமாம்!
பைத்தியந்தான்!!
கடைக்காரர் வந்தார்!

வீணா ஏன்
கலாட்டா
பண்ணுகிறாய்?

நானா கலாட்டா பண்ணுகிறேன்

அப்பொழுது செரீப் வந்தார்!
ஏய்! திருத்து உன் கலாட்டாவை!!

உன்னை கைது செய்ய வந்திருக்கிறேன். வா, என்னுடன்!
கொஞ்சம் பொறுங்கள், செரீப்!
பியர்சன் வந்தார்.
அவன் ஏற்படுத்திய சேதங்களுக்கு நான் பணம் தருகிறேன்!
ஏன்? நீங்கள் ஏன் கொடுக்க வேண்டும்?
அவன் எனக்கு வேண்டும்!
ஆனாலும், அவன் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும்!
பிறகு அனுப்பி வையுங்கள்.

பெரிய கொலைகாரக் கூட்டத்தையே பியர்சன் சேர்த்துவிட்டார்!
ஆட்கள் தயார்! புறப்பட வேண்டியதுதான்!!

அதேநேரம் அபாச்சிகளின் முகாமில்—
என் மகன் இளைஞன் ஆகிவிட்டான். அவனை வேட்டையில் பழக்க வேண்டும். அழைத்து வாருங்கள்!
மகனே! நாளை நாங்கள் வேட்டைகுப் போகிறோம். நீயும் வா. வேட்டையாடப் பழகு!
சரி, அப்பா
அடுத்த நாள் வேட்டைக்குப் புறப்பட்டார்கள்!
அப்பா! புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பதை நான் காட்டுவேன்!
மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா, என்ன.

பயங்கரமான காட்டு எருமை ஒன்று எதிர்ப்பட்டது!
KK

காட்டு எருமையை வேட்டை யாடுவதுதான் வேட்டைகளில் சிறந்தது!
என் திறமையைக் காட்டுகிறேன், பாருங்கள்!
யாரும் துணைக்குப் போகவேண்டாம்! என் மகன் தனியே போகட்டும்!!
காட்டு எருமைகள் கூட்டமாக வந்தன!

எனது வீரத்தையும் திறமையையும் காட்ட நல்ல வாய்ப்பு!
முதலில் கூட்டத்திலிருந்து இந்த எருமையைத் தனியே பிரிக்க வேண்டும்!
உங்கள் மகன் புலிக் குட்டியாகப் பாய்கிறான்!
என் வாரிசாக வரவேண்டியவன் அல்லவா?

காட்டு எருமை விரட்டி வந்தது!
வா! வா! அருகில் வா!!

இடர் என்று!

காட்டு எருமை பாய்ந்து முட்டி மோதித் தள்ளிவிட்டது!

ஆனால், இளைஞன் மூசா துணிச்சல் நிறைந்தவனாக இருந்தான்!
என் குதிரை பலியாகிவிட்டது! ஆனால், உன்னை உயிரோடு விட மாட்டேன்!

தலைவன் விரைந்து வந்தான்.
ஓடிவா மகனே! உன், உயிரைக காப்பாற்றிக்கொள்!!
மூசா ஈட்டியை எறிந்தான்!!
எருமை கீழே விழுந்தது!
வெற்றி! வெற்றி!!


உயிரைவிடுமுன் காட்டெருமை
பய்ங்கரமாக அலறியது!

அப்பா! என் முதல் வெற்றி!!
மகத்தான வெற்றி!! என்றாலும், உன் உயிரைக் காத்துக் கொள்ளவும் தெரிய வேண்டும்!!

அப்பொழுதுதான் பியர்சன் காட்டுக்கு வந்து சேர்ந்தார்.
அவர்கள்தான் அபாச்சிகள்!
அவன் தலைவன்! இளைஞன் தலைவனின் மகன்!!
தலைவனைப் பழிதீர்க்க நமக்கு மகன்தான் வேண்டும்!

நம் திட்டம் நிறைவேறும் நேரம் வந்துவிட்டது!
நான் சொன்னது நினைவு இருக்கிறது அல்லவா?
அந்த இளைஞனை எப்படியாவது உயிருடன் பிடித்து வாருங்கள்!

பழிக்குபபழி! இதுவே அவர்களின் திட்டமாக இருந்தது!!
தனியே வந்த மூசாவை வழிமறித்தார்கள்!
எங்களுடன் மரியாதையாக வருகிறாயா?
நீங்கள் யார்? நான் ஏன் உங்களுடன் வரவேண்டும்.

எங்களுடன் வா, சொல்லுகிறோம்!
அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்!
கைகலப்பு மூண்டது!
வெள்ளை நாய்களே! என் அப்பாவுக்குத் தெரிந்தால், உங்களை கூண்டோடு தொலைத்துவிடுவார்!
நீ உயிருடன் போனால்தானே அவருக்குத் தெரியும்!
தலைவனின் மகளைப் பிடித்துவிட்டோம் என்று பியர்சனிடம் போய்ச் சொல. இவனை என்ன செய்வது என்று கேட்டு வா!
சரி!

பியர்சன் நேரில் வந்துவிட்டார்.
இவனை ஓர் அறையில் வையுங்கள். நான் அபாச்சிகளிடம் போய் வருகிறேன். நான் திரும்பி வராவிட்டால், இவனைத் தீர்த்து விடுங்கள்!

பழிக்குப் பழிதான் என் திட்டம்! ஆனால், இவனை அல்ல! தலைவனை!!
காவலாளியை சந்தித்தார்கள்.
உங்கள் தலைவனைப் பார்க்க வேண்டும். போய்ச் சொல்!
அபாச்சிகள் முகாமுக்கு பியர்சன் வந்தார்.
வெள்ளையனே, வருக! அமைதி உண்டாகட்டும்!!
உன்னுடன் நான் தனியே பேச வேண்டும்.

என்ன செய்தி! சொல்லுங்கள்!
12 ஆண்டுக்குமுன்... ஐந்தே வயதான என் அருமை மகளை நீ கொன்றுவிட்டாய்!
அது பழைய கதை. இருதரப்பிலும் எத்தனையோ சாவுகள். அதற்கு யார் காரணம் தெரியுமா?
நாங்கள் தனித்து அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தோம்.

ஒரு நாள் திடீர் என்று வெள்ளையரின் துப்பாக்கிக் குண்டுகள் முழங்கின...

எங்கள் பகுதியில் கிடைக்கும் தங்கத்தை எடுக்க வந்தார்கள்

எங்கள் வீடுகளை அழித்தார்கள்! எங்களிடம் இருந்த பொன், பொருள் எல்லாவற்றையும் கொள்ளையடித்துப் போனார்கள்!

அன்றைக்கு... என் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறது... சின்னஞ்சிறுவனானஎன் மகனையும் கொன்றுவிட்டார்கள்!
அதறகாக என் மகனைக் கொன்றீர்களா?
இல்லை. அப்பொழுதும் நான் அமைதியை விரும்பினேன்
ஆனால், மக்கள் பழிக்குப்பழி வாங்கத் துடித்தார்கள்!

இரத்தத்துக்கு இரத்தம் என்ற வெறி சரியல்ல! அமைதிதான் நல்லது!
தலைவனாக இருக்கவே நீ தகுதியற்றவன!
அன்றுமுதல் வெள்ளையர்களை வழிமறித்துத் தாக்கத் தொடங்கினார்கள்!
கடைசியாக ஒரு பயணிகள் கூட்டதைத் தாக்கினார்கள். அது 12 ஆண்டு இருக்கும்.

அந்தக் கூட்டத்தில்தான் உங்கள் மகனும் இருந்தானா?
ஆமாம். ஐந்து வயதுச் சிறுவன்!
இந்தப் பதக்கத்தைப் பாருங்கள்!
ஆ! இது உனக்கு ஏது?
அந்தக் கூட்டத்தைத் தாக்கியபொழுது கிடைத்தது!

என் மகனுக்கு முதல் பிறந்த நாளில் நான் அணிவித்த பதக்கம், இது!
ஒரு பையனின் கழுத்தில்தான் இது கிடந்தது.

பச்சைமண் என்று கூடப பராமல் அவனைக் கொன்றுவிட்டீர்களே!

அம்புகள் பாயும் பொழுது ஆளைப் பார்ப்பது இல்லை!
என் ஒரே வாரிசை அநியாயமாகக் கொன்றுவிட்டீர்கள்!

நானும் மகனை இழநதவன்தான் அதனால்... தாக்குதல் முடிந்தபின் ஒரு சிறுவன் அழுதுகொண்டு நிற்பதைப் பார்த்தேன். தெய்வமும் குழந்தையும் ஒன்று அல்லவா?
அவனை என்ன செய்தீர்கள்?
நான் இழந்த குழந்தைக்குப் பதில் இந்தக் குழநதையை இறைவன் எனக்குக் கொடுத்தான் என்று மகிழ்ந்தேன்!
வெள்ளைக் குழந்தை என்று கூட எண்ணாமல் எடுத்து வளர்த்தேன். ரூசாதான் அந்த சிறுவன்!
ஆ! ரூசா என் மகனா!!

இருவரும் குதிரையில் ஏறி விரைந்தார்கள்.
அய்யோ! என் இரத்த வெறியில் என் மகனையே நான் பழிவாங்க நினைத்தேனே!
அவனை யாரும் எதுவும் செய்துவிட முடியாது. வீரனாக வளர்த்திருக்கிறேன்!!

அதோ அங்கேதான் அவனை அடைத்து வைத்திருக்கிறேன.
இளைஞனை எங்கே?
உள்ளே பத்திரமாக இருக்கிறான்!
சரி... இனி நீங்கள் எல்லாம் போகலாம்!
எங்கே போவது?

முரடன் துப்பாக்கியை எடுத்தான்!
நீங்கள் எல்லாரும் இப்பொழுது என்னிடம் சிக்கிக்கொணடு விட்டீர்கள்!
அபாச்சிகளிடம் இருக்கும் தங்கம் முழுவதும் என் கைக்கு வரவேண்டும்! இல்லாவிட்டால், தநதை மகன் இருவரையும் கொன்றுவிடுவேன்!!
டேவிட்! உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?
KK
எல்லாரும் என்பக்கம்! தங்கம் வரட்டும்!!
தங்கமா? தலைவனா!

தங்கம் வராவிட்டால்' இருவரும் காலி!
பேசிக்கொண்டே இருக்காதே' சுடு!!
குண்டுகளைக் கக்கத் துப்பாக்கி தயார் ஆயிற்று!
பியர்சன் பாய்ந்து தடுத்தார்!
அவன் என் மகன்! சுட்டுவிடாதே!!

அவர்களை இழுத்துக்கொண்டு ஓடுங்கள்!
பூனையாக இருந்த பியர்சன் மகனைக் காக்கப் புலியாகப் பாய்ந்தார்!
ஆ...!
அவர்கள் தப்பி ஓடுமுன் அபாச்சிகள் வந்து சூழ்ந்துகொண்டார்கள்!
யாரும் அசையக்கூடாது!

ரவுடிகள் கட்டி
இழுத்துப் போகப்
பட்டார்கள்!
இவர்கள்தான்
எங்களுக்குத் தொல்லை
கொடுப்பவர்கள்!

பியர்சனிடம் மகனை ஒப்படைத்தான், தலைவன்.
இனி நிந்தர
அமைதி ஏற்படும்
என்று
நினைக்கிறேன்!


அப்பா...
மகனே...
பிரிந்தவர் கூடினார்கள்.

நீங்கள் மட்டுமல்ல அவரும் எனக்கு அப்பாதான்.

அன்றுமுதல் வெள்ளையரும்– சிவப்பு இந்தியரும் அமைதியாக–
ஒரே இனமாக வாழத் தொடங்கினார்கள்.

(முடிந்தது)

அடுத்த
காமிக்ஸ்

முகமூடிவீரர் மாயாவி தோன்றும்

மரணக் குகை

காட்டிலிருக்கும் பழங்கால மன்னர்களுடைய கருவூலங்களை சிலர் கொள்ளையடிக்க வருகிறார்கள். விடுவாரா மாயாவி!

பரபரப்பான படக்கதை!

படிக்கத் தவறாதீர்கள்!

ஜனவரி 16-ந்தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.